Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 21 2025

புதன்கிழமை 21, மே 2025 | ஒளி: 10 கதிர் 243 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## குறைந்த வருமான வைப்பாளர்களுக்கு நிவாரணம்

குறைந்த வருமானம் கொண்ட வைப்புத் தொகையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில், 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையில், திங்கட்கிழமை (19) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

### வடக்கு, கிழக்கு காணிகளை

## “கையகப்படுத்த நடவடிக்கை எடுக்காது”





வடக்கு, கிழக்கில் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு உரியவர்களுக்குக் காணி உரித்துக்களை வழங்குவதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது. அங்குள்ள காணிகளை எந்த வகையிலும் கையகப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது என்று விவசாயம், கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

காணி தொடர்பில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் நிலையியல் கட்டளை 23/2 இன் கீழ் எழுப்பப்பட்ட மே 8ஆம் திகதி கேள்விகளுக்கு செவ்வாய்க்கிழமை (20) பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். சிறீதரன் எம்.பி. தனது கேள்வியில், வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை மையப்படுத்திய வகையில் அங்குள்ள பெருமளவான ஏக்கர் காணிகளை அளவீடு செய்யவும், அந்த காணிகளின் உரிமையாளர்களை பதிவு செய்யுமாறும் இல்லையேல் அந்த காணிகளைக் கையகப்படுத்தப்படுவது தொடர்பாகவும் கடந்த மார்ச் 28ஆம் திகதி வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதனை மீளப் பெறுவீர்களா? என்று கேட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## “பிரதமருக்கு மிரட்டல்”



பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு மின்னஞ்சல் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக விசாரணை ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) அன்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### SLPP, UNP மற்றும் SJB இன் பலருக்கு

# “பாதாள தொடர்பு”

### பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



பாதாள உலக நடவடிக்கைகளுடன் நேரடி அரசியல் தொடர்புகளை உளவுத்துறையினர் கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, விசாரணைகளுக்குப் பிறகு அத்தகைய அரசியல்வாதிகளின் பெயர்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

புலனாய்வு அறிக்கைகளின்படி, இலங்கை பொதுஜன பெரமுன (SLPP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP) மற்றும் சமகி ஜன பலவேகய (SJB) ஆகியவற்றின் முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மற்றும் தற்போதைய மாகாண அரசியல்வாதிகள், 10 சக்திவாய்ந்த பாதாள உலகக் கும்பல்களுடன் நேரடி தொடர்புகளைப் பேணுவதாக அமைச்சர் பாராளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (20) குறிப்பிட்டார்.

நாட்டில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில், எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றினார்.

அதற்கு பதிலளிக்கும் போதே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

## சந்திராணிக்கு குற்றப்பத்திரிகை



கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடான நியமனங்கள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் சந்திராணி பண்டாரவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் வறண்ட மண்டல மேம்பாட்டு அமைச்சராக இருந்த காலத்தில், உலர் மண்டல மேம்பாட்டு அமைச்சின் திட்ட இயக்குநராக எச்.

தொடர்ச்சி P2

## அனுரவுக்கு குருசாமி நிபந்தனையற்ற ஆதரவு



கொழும்பு மாநகர சபைக்கு போட்டியிட்ட கே.ரி.குருசாமி தலைமையிலான நான்கு சுயேச்சைக் குழு (லாந்தர் சின்னம் - 2 உறுப்பினர்கள்), தேசிய மக்கள் சக்திக்கு கொழும்பில் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க உறுதிமொழி அளித்துள்ளது.

### 8 மாதங்களில்

## 79 துப்பாக்கிச் சூடு: 52 பேர் மரணம்



கடந்த 8 மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 52 இறப்புகளும் பதிவாகியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) அன்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “எதிரணியினருக்கு அச்சுறுத்தல்”



எதிர்க்கட்சிகளின் எம்.பிக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான சிவஞானம் சிறீதரன் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## மஹிந்த, கோட்டா அஞ்சலி

முப்பது வருடகால யுத்தத்தில் உயிரிழந்த போர்வீரர்களை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு பாராளுமன்ற மைதானத்திற்கு அருகே அமைந்துள்ள போர்வீரர் நினைவுச்சின்னத்துக்கு முன்பாக செவ்வாய்க்கிழமை (20) காலை நடைபெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்றிருந்தனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பிற கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## யாழில் துப்பாக்கிச் சூடு: மூவர் தப்பியோட்டம்

■ நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணம் வரணிப் பகுதியில் சட்டவிரோத மணலுடன் தப்பிச் சென்ற கனரக வாகனம் மீது கொடிகாமம் பொலிஸார் செவ்வாய்க்கிழமை (20) அதிகாலை 1 மணியளவில் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

எழுதுமட்டுவாள் பகுதியில் கடமையிலிருந்த கொடிகாமம் பொலிஸார்,

தொடர்ச்சி P2

## “அகதிகள் தங்கும் சத்திரம் இந்தியா அல்ல”



இந்தியாவில் அடைக்கலம் கோரிய இலங்கையர் ஒருவரின் மனுவை நிராகரித்த இந்திய உயர்நீதிமன்றம், உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகள் தங்குவதற்கான சத்திரம் இந்தியா அல்ல என, வாய்மொழியாகக் குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் 2015ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட மேற்படி நபருக்கு எதிராக, 2018ஆம் ஆண்டில் சென்னை மேல் நீதிமன்றம் 7 வருடச் சிறைத்தண்டனையை விதித்தது.

தொடர்ச்சி P2

## கெஹெலியவின் மகனும் சந்தேக நபர்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கவும், அவர்களைப் பராமரிக்கவும் அமைச்சின் நிதியில் இருந்து சுமார் 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகன் ரமித் ரம்புக்வெல்ல, சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

இதற்கிடையில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை எதிர்வரும் ஜூன் மாதம் 03ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

வடக்கு, கிழக்கு காணிகளை

# “கையகப்படுத்த நடவடிக்கை எடுக்காது”

இது தொடர்பில் பதிலளித்த அமைச்சர் லால்காந்த கூறுகையில்,

காணிகளைக் கையகப்படுத்துவதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. காணி தீர்வுக்கான திணைக்களத்தால் காணி தீர்த்தல் தொடர்பான வர்த்தமானியே வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், ஒருபோதும் காணிகளை கையகப்படுத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு யுத்தம் காரணமாக காணி பிரச்சினைகள் ஏற்பட்டதால் அந்த காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது. குறிப்பாக மற்றைய மாகாணங்களில் நூறு வீதமும், 98 வீதமும் தீர்க்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் 30 மற்றும் 36 வீதமே தீர்க்கப்பட்டுள்ளது.

கிழக்கில் 87.4 வீதமே தீர்க்கப்பட்டுள்ளது. யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களால் சிலர் வெளிநாடு சென்றுள்ளதாலும், மேலும் சிலர் வேறு இடங்களில் இருப்பதால் ஆவணங்கள் இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் ஒருபோதும் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறவில்லை. தமக்கு முடிந்த வரையில் ஏதேனும் வகையில் தமது காணிகளை உறுதிப்படுத்தக் கூடியவர்களுக்கு உரித்துக்களை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

பிரதமரின் தலைமையில் 23ஆம் திகதி பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. இதன்போது நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஆராயவும் தயார்.

ஆனால், காணிகள் கையகப்படுத்தப்படாது. இது நாடு முழுவதும் முன்னெடுக்கும் சாதாரண செயற்பாடாகும். இது தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடிகளால் தீர்வு காண முடியாது போகின்றது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். நீங்கள் இந்த வர்த்தமானியை நிறுத்தினால் வடக்கு மக்களுக்கு காணி பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதிலேயே தாமதம் ஏற்படும் என்றார்.

SLPP, UNP மற்றும் SJB இன் பலருக்கு

# “பாதாள தொடர்பு”

சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாதாள உலகத்துடனான அரசியல் தொடர்புகள் பாதாள உலக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு பங்களித்துள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் வெளிப்படுத்துவதாக அமைச்சர் தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் மேற்படி பதிலுக்கு, எதிர்க்கட்சியினர் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தனர். இதனால் சபையில் சற்று சலசலப்பு ஏற்பட்டது.



# குறைந்த வருமான வைப்பாளர்களுக்கு நிவாரணம்

2025.04.01 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வரி வீதம் 5 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரை அதிகரிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வரி அறவிடப்படுகின்ற வருடாந்த வருமான எல்லையான 1.8 மில்லியன் ரூபாய்களை விஞ்சாத வருமானத்தைக் கொண்ட நபர்களின் தக்கவைக்கப்பட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான வைப்பாளர்கள் மற்றும் குறைந்த வருமானங் கொண்டவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பிரச்சினைக்கான தீர்வாக வரி விடுப்புக்குக் குறைவான வருமானத்தைக் கொண்டுள்ள நபர்களுக்கு சுய பிரகடனத்தைச் சமர்ப்பிக்கின்ற முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கிணங்க, வட்டி மீதான தக்கவைக்கப்பட்ட வரியை அறவிடுவதிலிருந்து விடுவிப்பதற்கு 1.8 மில்லியன் ரூபாய்களை விஞ்சாத மதிப்பீட்டு வருமானத்துடன் கூடிய அனைத்து நிலையான வைப்பாளர்களுக்கு சுய பிரகடனத்தை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் அனைத்து வகையான வங்கிக் கணக்குகளையும் திறப்பதற்காக வரி அறிமுக இலக்கத்தை (TIN) சமர்ப்பிப்பதற்குக் கட்டாயமாக்கும் தகுந்த திருத்தத்தை உள்வாங்கி 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தம் செய்வதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# “பிரதமருக்கு மிரட்டல்”

ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் இருந்து ஐ.பி. முகவரிகளை வைத்திருப்பவர்களால் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டதாக அமைச்சர் விஜேபால கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.ஜி.பி. தேசபந்து தென்னகோனை கொலை செய்வதற்கான சதித்திட்டம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ஐ.டி.எச்.சுத்தா என்ற சமன் குமாரவுக்கு ஏற்கெனவே ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மேலும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மீது துப்பாக்கிச் சூடு நடத்த சதித்திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தவறான தகவல் கிடைத்துள்ளதாக அமைச்சர் கூறினார். இது ஒரு பொய்யான கூற்று என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்றார்.

# 79 துப்பாக்கிச் சூடு: 52 பேர் மரணம்



நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், ஒரு நாட்டின் குடி மக்களின் வாழும் உரிமையை உறுதி செய்வது அரசாங்கத்தின் அடிப்படைப் பணியாகும். இங்கு நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வது அரசாங்கத்தின் முதன்மை பொறுப்பாகவும் காணப்படுகிறது.

இருப்பினும், நாடு முழுவதும் தற்போது நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூடுச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களை தடுக்க தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது.

கடந்த 8 மாதங்களில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும், 52 இறப்புகளும் பதிவாகியுள்ள சூழலில், இது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்த விடயம் தொடர்பாக நானும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பியிருந்தாலும், இதுவரை போதுமான தீர்வுகள் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே, இதற்கான அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் குறித்து நான் பின்வரும் கேள்விகளை எழுப்புகிறேன்.

1. நாடு முழுவதும் நிகழ்ந்து வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்/ கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் போதுமானதாக இல்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா? இல்லையெனில், இடைவிடாத துப்பாக்கிச் சூடுகள்/கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களை தடுப்பதற்கான குறிப்பிட்டதொரு திட்டத்தை அரசாங்கம் இந்த சபையில் முன்வைக்குமா?

2. நாடு முழுவதும் வன்முறை அதிகரிப்பதற்கும் தேசிய பாதுகாப்புக்கு தொடர்பு இருப்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்வதாக இல்லையா? வன்முறை அதிகரிப்பால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈர்ப்பில் ஏற்படும் எதிர்மறை தாக்கம் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதா?

3. நாடு முழுவதும் பரவியுள்ள போதைப்பொருள் போதைப்பொருளுக்கு நேரடியாகப் பலியாகி பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அதே நேரத்தில் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன. போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு இடையிலான மோதல்களால் சாதாரண மக்கள் கூட பலியாகி வருகின்றனர். இது தொடர்பாக இதுவரை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட திட்டம் தோல்வியடைந்ததாக தோன்றுவதால், இதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் மாற்றுத் திட்டம் உள்ளதா? அது யாது?

4. பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து, நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? பதிவான சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது? என்றார்.

# “எதிரணியினருக்கு அச்சுறுத்தல்”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) அன்று விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில், நாட்டின் பல இடங்களிலும் துப்பாக்கிச் சூடுகளும் படுகொலைகளும் அதிகரித்துள்ளன. தினமும் இவ்வாறான கொலைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான துப்பாக்கிச் சூடுகளினால் எதிர்க்கட்சிகளின் எம்.பிக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, எதிர்க்கட்சிகளின் எம்.பிக்களின் பாதுகாப்பு தொடர்பில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் இங்கு விடயங்களைக் கூறினார்.

எது எவ்வாறிருப்பினும், எமது பாதுகாப்பு தொடர்பில் அரசு அதிக கரிசனை கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றேன் என்றார்.

# “அகதிகள் தங்கும் சத்திரம்...

இந்த தண்டனைக் காலம் நிறைவடைந்ததும், உடனடியாக இந்தியாவை விட்டு வெளியேறுமாறு அவருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததுடன், அதனைச் சவாலுக்கு உட்படுத்தி மேற்படி இலங்கையர் இந்திய உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மேற்படி நபர் சட்டபூர்வமாக இந்தியா வந்தவர் என்றும், அவரது சொந்த நாட்டில் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும், சமர்ப்பணங்களை முன்வைத்துள்ளார்.

அதன்போது, உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா என்றும், ஏற்கெனவே 140 கோடி பேருடன் போராடி வருகின்ற இந்தியா, வெளிநாட்டினரை மகிழ்விக்கக்கூடிய ஒரு சத்திரம் அல்ல எனவும், இந்திய



உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தின் தலைமை நீதியரசர் தீபங்கர் தத்தா குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து, தமது சேவை பெறுநரின் உயிருக்கு இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதாக மனுதாரரின் சட்டத்தரணி தொடர்ந்து வலியுறுத்திய போதிலும், நீதிமன்றம் அவரை வேறு நாட்டிற்குச் செல்லுமாறு கோரியதுடன், அவரது மனுவையும் நிராகரித்ததாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# சந்திராணிக்கு குற்றப்பத்திரிகை



எம்.சந்திரவன்சவை உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் நியமித்ததாகவும், அவரது அமைச்சகத்திற்குள் உள்ள பதவிகளுக்குப் பல நெருங்கிய கூட்டாளிகளை சட்டவிரோதமாக நியமிப்பதில் செல்வாக்கு செலுத்தியதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2019 ஜனவரி 14 முதல் ஜனவரி 31 வரை செய்யப்பட்டதாகக் கூறும் 11 குற்றச்சாட்டுகள் இந்த குற்றப்பத்திரிகையில் உள்ளன.

# யாழில் துப்பாக்கிச் சூடு: மூவர் தப்பியோட்டம்

பளை பகுதியிலிருந்து சட்டவிரோத மணலுடன் சென்ற கனரக வாகனத்தை நிறுத்தியுள்ளனர்.

எனினும், கனரக வாகனம் நிறுத்தாது கொடிகாமம் பகுதியை நோக்கித் தப்பிச் சென்றுள்ளது.

இதையடுத்து, பொலிஸார் குறித்த கனரக வாகனத்தை தமது வாகனத்தில் துரத்திச் சென்றனர் எனினும், அந்த கனரக வாகனம், வேம்பிராய் நோக்கி மிக வேகமாக சென்றுள்ளது.

இதன்போது, லொறியில் பயணித்தவர்கள் பொலிஸாரின் வாகனத்தை நோக்கி ‘டார்ச் லைற்’ மூலம் ஒளியைப் பாய்ச்சியுள்ளனர்.



இதனால் தமது வாகனத்தை செலுத்த முடியாத நிலையில், பொலிஸார் கனரக வாகனத்தின் டயர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதையடுத்து, குறித்த கனரக வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி உட்பட இரண்டு சந்தேக நபர்கள் தப்பியோடியதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கெஹெலியவின் மகனும் சந்தேக நபர்

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கெஹலிய ரம்புக்வெல்ல செவ்வாய்க்கிழமை (20) அன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த உத்தரவை கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி பிறப்பித்துள்ளார்.

அத்துடன், இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை பரிசீலித்த நீதவான் தனுஜா லக்மாலி, இந்த வழக்கின், மற்றுமொரு சந்தேக நபராக கெஹெலிய ரம்புக்வெல்லவின் மகனான ரமித் மகன் ரமித் ரம்புக்வெல்ல பெயரையும் சந்தேகநபராகப் பெயரிட்டுள்ளார்.

### அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கும்

# “எதிரணியினருக்கு உயிர் அச்சுறுத்தல்”



அரசாங்கத்தை கடுமையாக விமர்சிப்பதால் எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூடு தற்போது சாதாரணமாகி விட்டது. ஆகவே, எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை(20) ஒழுங்கு பிரச்சினையை முன்வைத்து இவ்வாறு வலியுறுத்தினார்.

பாதாள குழுக்கள் உடன் தொடர்புடைய அரசியல் கட்சிகளின் பெயர்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இங்கு கூறினார். எனவே பாதாளக் குழுக்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் பெயர் விபரங்களை அமைச்சர் வெளியிட வேண்டும். அனைவரையும் குற்றவாளியாக்க பொய்யுரைக்க கூடாது

எமது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அரசாங்கத்தை விமர்சிக்கும் போது அவதானத்துடன் இருக்குமாறு குறிப்பிடுகிறார்கள். அவ்வாறான ஆபத்தான நிலை தான் தற்போது காணப்படுகிறது.

### காத்தான்குடியில்

# 42 பேர் கைது



**ரீ.எல்.ஜவ்பர்கான்**

ஐஸ், கேரள கஞ்சா, சிகரெட் மற்றும் பெருமளவிலான கசிப்பு போதைப்பொருளுடன் 42 பேர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்

57 லீற்றர் கசிப்புடன் 25 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் நால்வரும், கேரளா கஞ்சாவுடன் எட்டு பேரும் சிகரெட்டுடன் ஒருவரும் ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபட்ட நால்வருமாக 42 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்

காத்தான்குடி பொலிஸ் பிரிவு உட்பட்ட கர்பலா, கல்லடி, புதிய காத்தான்குடி, தாழங்குடா, கிரான் குளம் உட்பட பல பிரதேசங்களில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவித்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# டெங்கு, சிக்குன்யா: சிறுவர்கள் கவனம்

டெங்கு மற்றும் சிக்குன்குனியாவால் பாதிக்கப்படும் சிறுவர்கள், குழந்தைகள் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா கூறுகிறார்.

மழையுடன் இந்த நோய்கள் பரவுவது மேலும் அதிகரிக்கக்கூடும் என்று மருத்துவர் கூறுகிறார்.


அதன்படி, முடிந்தவரை தோட்டங்கள் மற்றும் நிறுவனங்களில் கொசுக்கள் பெருகும் இடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், டெங்கு பரிசோதனை செய்ய வேண்டும் என்றும் மருத்துவர் கேட்டுக் கொண்டார்.

மூட்டு வலி தொடர்ந்து இருந்தால், அது சிக்குன்யாவின் அறிகுறியாக இருக்கலாம் என்று தீபல் பெரேரா மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

# அடர்ந்த மூடுபனியால் போக்குவரத்து பாதிப்பு

**ரஞ்சித் ராஜபக்ஷ**



நுவரெலியாவிற்கு செல்லும் பல முக்கிய வீதிகளில் நிலவும் அடர்ந்த மூடுபனி காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா முதல் நுவரெலியா வரையிலும், நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நுவரெலியா முதல் ஹக்கல வரையிலும், நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் நுவரெலியாவில் இருந்து பம்பரகலை வரையிலும் இந்த அடர்ந்த பனிமூட்டம் நிலவுகிறது.

குறித்த வீதிகளில் வாகன ஓட்டுநர்கள் கவனமாக வாகனங்களை செலுத்துமாறு, நுவரெலியா பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

# காட்டு யானை தாக்கி நபர் ஒருவர் மரணம்

**க.அகரன்**



வவுனியா கண்ணாட்டி கணேசபுரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் கண்ணாட்டி கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய சுப்பிரமணியம் என அடையாளம் காணப்பட்டுள்ளார் .

குறித்த நபர் திங்கட்கிழமை (19) இரவு அவரின் வீட்டில் இருந்து அருகில் உள்ள கடைக்கு சென்ற போது வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ‘குஷ்’ஷுடன் மூன்று பெண்கள் கைது

**டி.கே.ஜி.கபில**

சுமார் 12 கோடி மதிப்புள்ள ‘குஷ்’ போதைப்பொருளை மின் உபகரணங்களுக்குள் மறைத்துக்கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்து ‘ரெட் சேனல்’ வழியாக வெளியேற முயன்ற மூன்று பெண்கள் திங்கட்கிழமை (19) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய தாயும் அவரது 18 வயதுடைய மகளும், வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 56 வயதுடைய வர்த்தக பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இந்த 12 கிலோ கிராம் போதைப்பொருளை தாய்லாந்தில் வாங்கி, 07 மின் உபகரணங்களுக்குள் மிக சூட்சுமமான முறையில் மறைத்துக்கொண்டு, இந்தியாவின் சென்னைக்கு வந்து அங்கிருந்து திங்கட்கிழமை(19) மாலை இண்டிகோ எயார்லைன்ஸ் மூலல் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த மூன்று பெண்களும் இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு மின் உபகரணங்கள் கொண்டு வந்திருப்பது கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு கெமரா அமைப்பைக் கண்காணித்ததன் மூலம் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூன்று பெண்களையும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அஷ்ரஃபின் இல்லம் பல்கலைக்கழகத்திடம் கையளிப்பு



**பாறுக் ஷிஹான், எம்.எஸ்.எம்.ஹனிபா**

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் ஒலுவில் இல்லம், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவரது குடும்பத்தினரால் திங்கட்கிழமை (19) உத்தியோகபூர்வமாக பல்கலைக்கழகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் உட்பட மறைந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃபின் புதல்வர் அமான் அஷ்ரப் பல்கலைக்கழக பேராசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதற்காக முயற்சித்த அனைவருக்கும் குறிப்பாக, தலைவரின் குடும்பத்திற்கும் நன்றியினைத் தெரிவிப்பதோடு மறைந்த தலைவர் அஷ்ரஃப்காகவும் பிரார்த்திப்பதாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.





# மௌலானா மௌலவி காத்தான்குடிக்கு விஜயம்

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அல்லாமா மௌலானா மௌலவி. மக்ஸூத் அஹ்மத் அல் காதிரி திங்கட்கிழமை(19) இரவு காத்தான்குடிக்கு விஜயம் செய்தார்

காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி ஆகிய இடங்களுக்குச் சென்ற இவருக்கு வரவேற்பளிக்கப்பட்டது

காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஜவாஹிர் தலைமையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் இவருக்குப் பொன்னாடை போர்த்தி பள்ளி வாயல் நிர்வாகத்தினர் கௌரவித்தனர்.

இதனையடுத்து, காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரியில் இடம் பெற்ற வரவேற்பு நிகழ்வில் இவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்

காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்க் அலியார் ரியாதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதன் அதிபர் பிரதி அதிபர் விரிவுரையாளர்கள் கல்லூரி நிர்வாகிகள் உலமாக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

அல்லாமா மௌலானா மௌலவி. மக்ஸூத் அஹ்மத் அல் காதிரி அவர்களின் இலங்கை விஜயத்தின் போது காத்தான்குடி ஏறாவூர் உட்பட பல இடங்களுக்கும் விஜயம் செய்து ஆன்மீக சொற்பொழிவுகளை நடத்தியுள்ளார்.

அவர் 1978ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியில் உருது மொழிப் பாட ஆசிரியராகக் கடமையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# சகித்துக் கொள்வதற்காக அல்ல; வாழ்க்கை அனுபவிப்பதற்கு

நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் கடனால் துன்பப்பட வேண்டியுள்ளது. மக்கள் பெறும் வருமானம் அவர்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. தங்கள் சொந்த வாழ்க்கையைக் கூட பணயம் வைத்து, தங்கள் வாழ்க்கையின் இறுதி ஆட்டத்தை விளையாடிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இன்னும் நிம்மதியின் எந்த அறிகுறியும் தெரியவில்லை.

சிக்கனம் நன்மைகளைத் தரும் என்று கூறப்பட்டாலும், அது அடையப்படவில்லை. செழிப்பு அல்லது வசதியிலிருந்து வரும் சொற்ப வருமானத்தில் கூட குடும்பம் மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் வாழ முடியும் என்று நாங்கள் கூறவில்லை.

இலங்கை தொழிலாளர்களின் வருமானம் மிகக் குறைந்த அளவில் கடந்த காலகட்டத்தில் அதிகரித்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு ஒரு சிறிய அளவு நிவாரணம் கிடைத்தாலும், மற்ற ஊழியர்களுக்கு அது கூட கிடைக்கவில்லை. ஆனால் பொருட்களின் விலை வேகமாக உயர்ந்தது. இதன் விளைவாக, அதிகரித்து வரும் பணவீக்கத்தை எதிர்கொள்ளும் போது நமது நாட்டின் நுகர்வோர் மக்கள் மிகவும் உதவியற்றவர்களாக மாறியுள்ளனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக, நாட்டில் 22 சதவீத குடும்பங்கள் கடன் சுமையால் இருப்பதாகவும், தற்போது நாட்டில் 54.9 சதவீத குடும்பங்கள் கடன் சுமையாக இருப்பதாகவும் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள சமீபத்திய கணக்கெடுப்பு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அதிகபட்ச சதவீதமான 31 சதவீத குடும்பங்கள், தங்கள் சொத்துக்களை அடமானம் வைத்திருப்பதன் காரணமாக கடனில் மூழ்கியுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகிறது. 21.9 சதவீத குடும்பங்கள் வங்கிகளுக்குக் கடனில் உள்ளன, மேலும் 9.7 சதவீத குடும்பங்கள் வட்டிக்கு கடன் வாங்குவதால் கடனின் சுமையில் உள்ளன.

இலங்கை குடும்ப அலகுகளில் 60.5 சதவீதத்தினரின் வருமானம் குறைந்துள்ளதாகவும், அதே நேரத்தில் நாட்டில் 3.4 சதவீத குடும்பங்களின் வருமானம் மட்டுமே அதிகரித்துள்ளதாகவும் அறிக்கை காட்டுகிறது. பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டாலும், இலங்கை குடும்பங்களில் 36.6 சதவீதத்தினரின் வருமானம் மட்டுமே மாறாமல் இருப்பதாகவும் கணக்கெடுப்பு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இலங்கையின் 91.1 சதவீத குடும்பங்களின் ஒட்டுமொத்த சராசரி மாதாந்திர செலவு அதிகரித்துள்ளதாகவும், அதே நேரத்தில் 3.6 சதவீத குடும்பங்களில் மட்டுமே மாதாந்திர செலவு குறைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் நாளுக்கு நாள் வறுமையில் விழுவதைத் தடுக்க, பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதும், அவர்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்க உடனடி நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியம்.

ஒருவரின் வேலையில் இருந்து கிடைக்கும் சம்பளம் வாழ்க்கை நடத்தப் போதுமானதாக இல்லை. வாழ்க்கை என்பது சகித்துக்கொள்ளப்படுவதற்காக அல்ல, அனுபவிக்கப்படுவதற்காக என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# தொங்கு உள்ளூராட்சி சபைகளின் எதிர்காலம்



எம்.எஸ்.எம்.ஐயூப்

கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையை வென்ற சபைகள் மறக்கப்பட்டு எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை பெறாத சபைகளின் பக்கமே அரசியல் ஆர்வம் உள்ளவர்களின் கவனம் தற்போது திரும்பியுள்ளது.

ஏனெனில், கட்சிகள் அறுதிப் பெரும்பான்மையை வென்ற சபைகளின் நிர்வாகத்தை எந்தக்கட்சி நிறுவப் போகிறது என்ற கேள்வி எழுவதில்லை. அறுதிப் பெரும்பான்மை பெற்ற கட்சி சம்பந்தப்பட்ட சபையின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ளும்.

ஆனால், ஒரு கட்சி ஒரு சபையின் மொத்த ஆசனங்களில் ஆகக் கூடுதலானவற்றைக் கைப்பற்றிக் கொண்டாலும், 50 சதவீத ஆசனங்களை அடையாவிட்டால் நிலைமை என்னவாகும் என்பதே தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கலப்பு தேர்தல் முறையிலேயே நடைபெறுகின்றன. அதன்படி சகல கட்சிகளும் தத்தமது உள்ளூராட்சி மன்றத்தில் தொகுதி வாரியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றையும் மேலதிக வேட்பாளர் பட்டியல் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

அத்தேர்தலின் போது, வாக்காளர்கள், அம்மன்றங்களின் தேர்தல் தொகுதிகளுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கே வாக்களிக்கின்றனர். அதன் மூலம் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் தொகுதி வாரியாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இதனை அடுத்து ஒவ்வொரு கட்சியும் உள்ளூராட்சி மன்ற பிரதேசத்தில் சகல தொகுதிகளிலும் பெற்ற வாக்குகளின் விகிதாசாரப்படி, அக்கட்சிகளுக்கு முழு உள்ளூராட்சி மன்றத்திலும் பெறும் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

குறிப்பிட்டதொரு கட்சி தொகுதி வாரியாக பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அக்கட்சிக்கு விகிதாசாரப்படி, கிடைக்க வேண்டிய மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை பார்க்கிலும் குறைவாக இருந்தால், அக்கட்சி தமது மேலதிக பட்டியலில் இருந்து அதற்காக உறுப்பினர்களை நியமிக்க முடியும். அதன்படி, அவ்வாறு நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பெயர்களை ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அரசியல் கட்சிகளுக்கு அறிவித்துள்ளது.

ஒரு கட்சி தொகுதி வாரியாக பெற்ற ஆசனங்களின் எண்ணிக்கை தமக்குரிய மொத்த ஆசனங்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் கூடுதலாக இருந்தால் அக்கட்சி மேலதிக பட்டியலில் இருந்து உறுப்பினர்களை நியமிக்க முடியாது.

இவ்வாறு குறிப்பிட்டதோர் கட்சி பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை உள்ளூராட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேலாக இருந்தால் அக்கட்சி சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும். எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாவிட்டால் சிக்கலான நிலைமை உருவாகும்.

உதாரணமாக, கொழும்பு மாநகர சபையில் மொத்தம் 117 ஆசனங்கள் இருக்கின்றன. அவற்றில் 48 ஆசனங்களைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி 29 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய கட்சி 13 ஆசனங்களையும் பெற்றுள்ளன. ஏனைய கட்சிகள் ஐந்துக்கும் குறைவான ஆசனங்களையே வென்றுள்ளன.

தேசிய மக்கள் சக்தி, ஆகக் கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றினாலும் அக்கட்சிக்கு சபையில் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஏனைய கட்சிகள் பெற்ற ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 69ஆக இருக்கிறது. ஆயினும், அக்கட்சிகள் கூட்டணியாகத் தேர்தலில் போட்டியிடவில்லை.

தேர்தலின் பின்னராவது சபையில் கூட்டாக செயற்படுவதாக அக்கட்சிகள் இன்னமும் தமக்கிடையே உடன்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளவும் இல்லை. இந்த நிலையில், சபையை நிர்வகிக்கப் போவது யார்? சபையின் தவிசாளராக, அதாவது அடுத்த கொழும்பு மேயராகப் போவது யார்?

நாட்டில் மற்றொரு முக்கிய மாநகர சபையான யாழ்ப்பாண மாநகர சபையிலும் இந்த நிலையே நிலவுகிறது. அங்கு இலங்கை தமிழரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈ.பி.டி.பியும் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தலா 4 ஆசனங்கள் வீதமும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தலா ஒரு ஆசனம் வீதமும் பெற்றுள்ளன. அங்கும் முதலிடத்தை அடைந்த தமிழரசுக் கட்சியால் மாநகர ஆட்சியை நிறுவ முடியவில்லை.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம்.எச்.அபேரத்ன, கடந்த பெப்ரவரி மாதம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இம் முறை தேர்தலின் மூலம் தெரிவான உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஜூன் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவும் கடந்த 13ஆம் திகதி அதனை அறிவித்து விட்டு அதற்கு முன்னர் அரசியல் கட்சிகள் தாம் அறுதிப் பெரும்பான்மையைப் பெற்ற மாநகர மற்றும் நகர சபைகளின் மேயர்களையும் பிரதி மேயர்களையும் பிரதேச சபைகளின் தவிசாளர்களையும் பிரதி தவிசாளர்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறு தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி, அறுதிப் பெரும்பான்மை பெறாத சபைகளின், குறிப்பாக, கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்தை அக்கட்சி கைப்பற்றிக் கொள்வதைத் தடுக்க ஐக்கிய மக்கள் சக்தி பெரும் முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அதாவது தேசிய மக்கள் சக்தி அல்லாத சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து அச்சபைகளின் தவிசாளர்களை நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே அக்கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் இந்த விடயத்தில் கொள்கையளவில் உடன்பாடு கண்டுள்ளதாக அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

கொள்கையளவில் என்றால், ஒன்றாய் செயல்பட விரும்புவதை மட்டுமே குறிக்கிறது. எவ்வாறு செயல்படுவது என்பதைப் பற்றி அவர்கள் இன்னமும் உடன்படவில்லை. கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்று சேர்ந்தாலும் அக்கட்சிகளால் மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது. இவ்விரு கட்சிகளும் மொத்தம் 42 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளன.

அவற்றோடு ஏனைய சில கட்சிகளும் சிலவேளை இணையலாம். ஆயினும், தேசிய மக்கள் சக்தியை மாநகர சபையின் அதிகாரத்தைக் கைப்பற்ற இடமளிக்கக்கூடாது என்ற ஒரே காரணத்துக்காக ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மற்றைய சகல கட்சிகளும் இல்லை. அவை ஐ.தே.கவுக்கும் ஐ.ம.சவுக்கும் உதவி செய்வதாக இருந்தால், அதற்காக எதையாவது எதிர்பார்க்கலாம். சிலவேளை, பிரதி மேயர் பதவியை அல்லது வேறு ஏதாவது பதவியை எதிர்பார்க்கலாம். அல்லது பணத்தை எதிர்பார்க்கலாம்.

ஐ.தே.கவுக்கும் ஐ.ம.சவுக்கும் இடையிலும் கொள்கையளவிலான உடன்பாட்டுக்கு அப்பால் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளும் விடயத்தில் இன்னமும் பேச்சுவார்த்தைகள் நடைபெறவில்லை. இவ்விரு கட்சிகளும் ஒன்றையொன்று வளர விடக் கூடாது அது தமக்கு ஆபத்தானது என்று கருதும் கட்சிகளாகும். தேர்தலுக்கு முன்னர் இணைந்து போட்டியிட வேண்டும் என இரு கட்சிகளினதும் பலர் கோரிக்கை விடுத்த போதிலும், இந்த பகை உணர்வின் காரணமாக. குறிப்பாக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஐ.ம.ச. தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் நிலவும் கடும் பகை உணர்வின் காரணமாக அக்கட்சிகள் இணைந்து போட்டியிடவில்லை.

எனவே, தேசிய மக்கள் சக்திக்கு இடமளிக்காது கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றும் விடயத்திலும் இரு கட்சிகளும் ஒன்றையொன்று சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றன. ஐ.தே.கவுக்கு கொழும்பில் மேயர் பதவியை விட்டுக் கொடுத்தால் அப்பதவியைப் பாவித்து ஐ.தே.க. தமது உறுப்பினர்களை வளைத்துப் போட்டுக்கொள்ளும் என்று ஐ.ம.ச. தலைவர்கள் நினைக்கலாம். இவ்வாறே ஐ.தே.க. தலைவர்களும் நினைக்கலாம். எனவே, இக்கட்சிகள் இணைந்து செயல்படும் வரை இணைந்து செயல்படும் என்று கூற முடியாது.

தேசிய மக்கள் சக்தி, உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இதுவரை நாட்டை ஆட்சி புரிந்த கட்சிகளோடு இணைவதில்லை என்றும் சுயேச்சைக் குழுக்களுடன் மட்டுமே இணையும் என்றும் தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியின் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியிருக்கிறார்.

தம்மை விடக் குறைவாக ஆசனங்களைப் பெற்ற எந்த ஒரு கட்சிக்கும் ஏனைய கட்சிகளோடு இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை கைப்பற்றத் தார்மிக உரிமை இல்லை என்று தேசிய மக்கள் சக்தி கூறுகிறது. மக்கள் விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து சென்றவர்களின் கட்சி ஒன்றான முன்னணி சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரத்னமும் அக்கருத்தை ஆதரித்துப் பேசியிருந்தார்.

தேசிய மக்கள் சக்தியை எதிர்த்துப் போட்டியிட்ட கட்சிகளுடன் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்ற அக்கட்சிக்குத் தார்மிக உரிமை இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சில தலைவர்கள் வாதிடுகின்றனர். ஆனால், அதுவும் தமக்கும் பொருந்துகிறது என்பதை அவர்கள் சிந்திக்க வில்லை போலும்.

எவ்வாறாயினும், கட்சிகள் கூட்டாக உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்தைக் கைப்பற்றினாலும் கூட்டில் இருக்கும் சிறிய கட்சிகள் அடிக்கடி பல சிறப்புரிமைகளைக் கேட்டு மிரட்டி பெரிய கட்சிகளைப் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் சாத்தியம் அதிகமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

வாழ்க்கையில் வாழ்வதே பெரும் கலை. இதில் நடிப்புக் கூடாது. உண்மையாக வாழ்ந்தால் முதியவர்கள், குழந்தைகள் என பராய வேறுபாடுகள் உள்ளவர்களுடன், பழகிய வண்ணமே இருக்கின்றோம். குழந்தைகளுடன் குழந்தையாக, இளைஞர்களுடன் இளைஞராக, முதியவர்களுடன் முதியவராக சிந்தையாலும் நடத்தையாலும் ஒன்றித்து வாழ்வது, அவரவர் திறமையைப் பொறுத்தது. அது, இயல்பாக அமையவேண்டும். எல்லோரும் நம்மவர்

வாழ்க்கையின் நுட்பத்தை, இயல்பாகவே புரிந்துகொள்வதற்கு, அனுபவம் வேண்டும் என்கின்றனர்.

சமூகத்துடன் தொடர்புகொள்ளும்போது, பழகும் நபர்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்பவர்களை எல்லோருக்கும் பிடிக்கும். ஒளிவு, மறைவு, கபடம், வஞ்சம் போன்ற குணங்களைக் கொண்டிருப்போரின், வேடம் நீண்டநாள்கள் நீடிக்காது. இத்தகையவர்களின் தீய எண்ணங்களை, காலப்போக்கில் அனைவரும் புரிந்துகொள்வார்கள்.

குழந்தைகளுடன் குழந்தையாக, இளைஞர்களுடன் இளைஞராக, முதியவர்களுடன் முதியவராக சிந்தையாலும் நடத்தையாலும் ஒன்றித்து வாழ்வது, அவரவர் திறமையைப் பொறுத்தது. அது, இயல்பாக அமையவேண்டும். எல்லோரும் நம்மவர் என எண்ணுக.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நோய் பரவும் அபாயம்




வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் டெங்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நுழைவாயிலில் இருக்கும் பாதுகாப்பற்ற குப்பைத் தொட்டியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசி செல்வதால் மாடுகள் நாய்கள் அந்த குப்பைத் தொட்டியை அலங்கோலம் செய்து வருகின்றன.


கடந்த இரண்டு நாட்களாக விடுமுறை நாள் என்பதால் திங்கட்கிழமை (19) பணிக்கு வந்த அரச உத்தியோகத்தர்கள் குறித்த குப்பையைக் கண்டும் காணாமலும் விட்டுச் சென்றுள்ளனர்.

பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் வைத்தியசாலை, உணவகம், காவல் நிலையம், சமூர்த்தி நிலையம், வங்கி, பிரதேச சபை போன்றன காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்திற்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த குப்பையில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதால் நாய்கள் குப்பையைக் கிளறி வருகின்றன.

தமது அலுவலகத்திற்கு முன்னால் காணப்படும் குப்பையை சுத்தம் செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு சமூக அக்கறையுடன் சேவை செய்வார்கள் என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

– பு.கஜிந்தன்

# மங்கள நன்நீராட்டு விழா



**வி.ரி.சகாதேவராஜா**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கிருஷ்ணபிள்ளை பிரியதர்ஷன் சர்மாவிற்கு சிவாச்சாரிய மங்கள நன்நீராட்டு விழா இடம்பெற்றது.

சிவாச்சாரியார்கள் முன்னிலையில் சிவாச்சாரிய பட்டம் பெற்ற சிவஸ்ரீ பிரியதர்ஷன் சர்மா இல்லாள் மேகலா சகிதம் கலந்து கொண்டு அனைவருக்கும் நன்றி கூறினார்.

காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் அனைத்து குருமார்களுடனும் ஆலய நிர்வாகத்துடனும் மிகவும் சிறப்பாக இந்நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (18) அன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.





# 16ஆவது தேசிய போர் வீரர் நினைவு விழா




30 வருட யுத்த நிறைவின் வெற்றிக் கொண்டாட்டத்தின் 16ஆம் ஆண்டு நினைவு நாள் பத்தரமுல்லையில் உள்ள போர்வீரர்கள் நினைவு சின்னத்திற்கு முன்பாக திங்கட்கிழமை(19) மாலை வரை நடைபெற்றது.







அமெரிக்கா

## ரஷ்யா – உக்ரைன் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை

# விரைவில் ஆரம்பம்?

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடனான இரண்டு மணிநேர தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது ட்ரூத் சமூகத்தளத்தில் "ரஷ்யாவும் உக்ரைனும் உடனடியாக போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தையைத் தொடங்க இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் வெளியிட்ட பதிவில்,

"ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுடன் எனது இரண்டு மணிநேர உரையாடலை நிறைவு செய்தேன். அது மிகவும் சிறப்பாக நடந்தது என நான் நம்புகிறேன். ரஷ்யாவும் உக்ரைனும் உடனடியாக போர் நிறுத்தம் தொடர்பாக, இன்னும் முக்கியமாக, போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க உள்ளனர். அதற்கான நிபந்தனைகள் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இந்த ரத்தக்களரியான பேரழிவு முடிந்ததும், அமெரிக்காவுடன் பெரிய அளவிலான வர்த்தகம் செய்ய ரஷ்யா விரும்புகிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ரஷ்யாவுக்கு மிகப் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு மற்றும் வளத்தை உருவாக்க மிகப் பெரிய வாய்ப்பு உள்ளது. அதன் ஆற்றல் அளவில்லாதது. அதேபோல், உக்ரைனும் தனது நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயல்பாட்டில், வர்த்தகத்தில் பெரும் பயனாளியாக இருக்க முடியும். ரஷ்யாவுக்கு உக்ரைனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் உடனடியாகத் தொடங்கும்.

புட்டினுடனான அழைப்புக்குப் பிறகு, உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, ஜேர்மனி ஜனாதிபதி பிரீட்ரிக் மெர்ஸ், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் ஆகியோருக்கு நான் தகவல் தெரிவித்துள்ளேன். போப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாடிகன், இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பதாகக் கூறியுள்ளது. செயல்முறை தொடங்கட்டும்" என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்

## "போரை முடிவுக்கு வர

# ரஷ்யா தயாரா?"



ரஷ்ய தரப்பு கொள்கைகளைப் பற்றி எனக்குத் தெரியாது என தெரிவித்துள்ள உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ட்ரம்புடனான எங்களுடைய பேச்சுவார்த்தையின் வழியே நான் புரிந்து கொண்ட விடயம் என்னவென்றால், ரஷ்ய தரப்பு எங்களுக்கு குறிப்பு ஒன்றை அனுப்ப விரும்புகிறது என தெரிகிறது எனவும் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

"போர் நிறுத்தம் மட்டுமின்றி, அவர்கள் வேறு சில கொள்கைகளையும் விரும்புகிறார்கள். போர் நிறுத்தத்திற்கு ஒவ்வொருவரும் அதிக ஆர்வத்துடன் உள்ளனர். நிறைய இழப்புகள் ஏற்பட்டு விட்டன. உண்மையில் போர் முடிவுக்கு வர வேண்டும் என நான் விரும்புகிறேன்.

அதற்கு ரஷ்யா தயாராக உள்ளதா? என எனக்கு உறுதியாகத் தெரியவில்லை. நாங்கள் அவர்களை நம்பத் தயாராக இல்லை என்றார்.

இந்தோனேசியா

## தங்க சுரங்கம் இடிந்து விழுந்து

# 19 பேர் பலி

இந்தோனேசியா, மேற்கு பப்புவா மாகாணம் ஏர்பாக் மலைப்பகுதி அருகே, தங்கச் சுரங்கம் இடிந்து விழுந்ததில், 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோதமாக குறித்த தங்க சுரங்கம் தோண்டப்பட்டு தங்கம் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த சுரங்கத்தில் உள்நாட்டினர் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்து ஏராளமானவர்கள் தங்கியிருந்து பணிபுரிந்து வந்தனர்.

இந்தநிலையில், திங்கட்கிழமை (19), வடக்கு பப்புவாவில் பெய்த அடைமழையால், தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் சட்டவிரோத தங்கச் சுரங்கத்துக்குள்ளும் வெள்ளம் புகுந்தது. தொழிலாளர்கள் பலர் தங்கம் வெட்டி எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில் அந்த சுரங்கம் பயங்கர சத்தத்துடன் இடிந்து விழுந்தது.

இதில் இடிபாடுகளில் சிக்கி 19 பேர் உயிரிழந்தனர். இது குறித்துத் தகவலறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர்.

கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிருக்குப் போராடிய 20க்கும் மேற்பட்டோரை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். உயிரிழந்த 6 பேரின் உடல்கள் மட்டும் மீட்கப்பட்டுள்ளன. சுரங்கத்தில் தொடர்ந்து மீட்புப்பணி நடைபெற்று வருகிறது.



இந்தியா


## கொடியிறக்கும் நிகழ்வை காண

# பொதுமக்களுக்கு மீண்டும் அனுமதி

அட்டாரி - வாகா எல்லையில் கொடியிறக்கும் நிகழ்வைக் காண 12 நாட்களுக்குப் பிறகு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூரைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக, இருநாடுகளுக்கும் இடையேயான அட்டாரி, வாகா எல்லை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. தொடர்ந்து, அட்டாரி - வாகா எல்லையில் நாள்தோறும் மாலையில் நடைபெறும் கொடியிறக்க நிகழ்வும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

தற்போது எல்லையில் அமைதி திரும்பிய நிலையில், இன்று முதல் தினமும், அட்டாரி, வாகா எல்லை கொடியிறக்க நிகழ்வு நடைபெறும் என எல்லை பாதுகாப்புப் படை



தெரிவித்துள்ளது.

புதன்கிழமை (21) முதல் கொடியிறக்கும் நிகழ்வைக் காணப் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கொடியிறக்கும் நிகழ்வின் போது பாகிஸ்தான் படை வீரர்களுடன் இந்திய வீரர்கள் கைகுலுக்க மாட்டார்கள் எனவும், எல்லைக் கதவு திறக்கப்படாது எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.



## ஐ.பி.எல்:

# லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வாய்ப்பை இழந்தது

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.), தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் இழந்துள்ளது.

லக்னோவில் திங்கட்கிழமை(19) நடைபெற்ற சண்றைசர்ஸ் ஹைதரபாத்துடனான போட்டியில் தோற்றமையைத் தொடர்ந்தே தகுதிகாண் போட்டிகளுக்குத் தகுதி பெறுவதற்கான வாய்ப்பை சுப்பர் ஜையன்ட்ஸ் இழந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: சண்றைசர்ஸ்

சுப்பர் ஜையன்ட்ஸ்: 205/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: மிற்செல் மார்ஷ் 65 (39), ஏய்டன் மார்க்ரம் 61 (38), நிக்கலஸ் பூரான் 45 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: எஷான் மலிங்க 2/28 [4])

சண்றைசர்ஸ்: 206/4 (18.2 ஓவ.) (துடுப்பாட்டம்: அபிஷேக் ஷர்மா 59 (20), ஹெய்ன்றிச் கிளாசென் 47 (28), இஷன் கிஷன் 35 (28), கமிந்து மெண்டிஸ் 32 (21) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிக்வேஷ் ரதி 2/37 [4], ஷர்துல் தாக்கூர் 1/39 [4], ஆவேஷ் கான் 0/25 [3])

போட்டியின் நாயகன்: அபிஷேக் ஷர்மா.

இந்நிலையில், மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள முக்கியமான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



## ஐ.பி.எல்: என்கிடியின் தற்காலிகப் பிரதியீடாக

# முஸர்பனியைக் கைச்சாத்திட்ட பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரானது, தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் லுங்கி என்கிடியின் தற்காலிகப் பிரதியீடாக சிம்பாப்வேயின் வேகப்பந்து வீச்சாளர் பிளஸிங் முஸர்பனியைக் கைச்சாத்திட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னதான தயார்படுத்தல்களுக்காக தென்னாபிரிக்காவுடன் என்கிடி இணையவுள்ளார்.

அந்தவகையில் எதிர்வரும் திங்கட்கிழமை (26) முதல் பெங்களூருடன் முஸர்பனி இணையவுள்ளார்.

## இரண்டாவது போட்டியில்

# பங்களாதேஷை வென்ற ஐ.அ.அமீரகம்

பங்களாதேஷுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஷார்ஜாவில் திங்கட்கிழமை (19) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஐக்கிய அரபு அமீரகம் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பங்களாதேஷ், தன்ஸிட் ஹஸனின் 59 (33), தௌஹிட் ஹிரிடோயின் 45 (24), அணித்தலைவர் லிட்டன் தாஸின் 40 (32), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோவின் 27 (19), ஜாகிர் அலியின் 18 (06) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சஹிர் கான் 4-0-36-2, ஹைதர் அலி 4-0-31-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 206 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஐ.அ.அமீரகம், அணித்தலைவர் முஹமட் வஸீமின் 82 (42), முஹமட் ஸொஹைப்பின் 38 (34), ஆசிஃப் கானின் 19 (12), ஹைதர் அலியின் ஆட்டமிழக்காத 15 (06), அலிஷான் ஷரஃபுவின் 13 (09), துருவ் பரஷாரின் 11 (07) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கையடைந்து பங்களாதேஷுக்கெதிரான முதலாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டி வெற்றியை பதிவு செய்து கொண்டது.

இப்போட்டியின் நாயகனாக வஸீம் தெரிவானார்.

இத்தொடரின் முதலாவது போட்டியை பங்களாதேஷ் வென்ற நிலையில், இரண்டு அணிகளுக்குமிடையிலான தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# பிறைட்டனிடம் தோற்றது லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனின் மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (20) அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் சம்பியனான லிவர்பூல் தோற்றது.

லிவர்பூல் சார்பாக ஹார்வி எலியட், டொமினிக் ஸபொஸ்லாய் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பிறைட்டன் சார்பாக யசின் அயரி, கவோரு மிடோமா, ஜக் ஹின்ஷெல்வூட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 21, மே 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.